www.freetnbooks.com

9 - STD

# முழு ஆண்டுத் தேர்வு - 2024

## தமிழ்

பதிவு எண். 9226

நேரம்: 2.30 மணி

மதிப்பெண்கள்: 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 15 x 1 = 15

1. தமிழ்விடுதூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. ஐம்பெறும்குழு, எண்பேராயம் ______ சொற்தொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) வரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ______

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

5. 'அதிரப் புகுதக் காணக் கண்டேன்' யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனில் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

6. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்

இ) அள்ளல் - சோறு ஈ) முடிவு - தொடக்கம்

7. இளங்கழுகு, செய்கோலம் - இலக்கணக் குறிப்புத் தருக?

அ) உருவகத்தொடர், வினைத்தொகை அ) பண்புத்தொகை, வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

8. முண்டி மோதும் துணிவே இன்பம் ______

இவ்வடியில் இன்பமாக உருவாக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) பிறப்பு

9. 'ஞானம்' என்பதன் பொருள்

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

10. ஞாலத்தின் மாணப் பெரிது - இவ்வடியில் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

அ) நாள் அ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

11. பெரியபுராணத்தை இயற்றியவர் ______ ஆவார்.

அ) திருவள்ளுவர் ஆ) சேக்கிழார் இ) இளங்கோவடிகள் ஈ) பாரதியார்

**பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்



CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______

அ)நாலடியார் ஆ) தொண்டை வேந்தன்

இ) நாச்சியார் திருமொழி ஈ) பெரியபுராணம்

13. இப்பாடலை இயற்றியவர் ______

அ) திருவள்ளுவர் ஆ) கம்பர் இ) ஆண்டாள் ஈ) இளங்கோவடிகள்

14. 'தாமம்' என்ற சொல்லின் பொருள் ______

அ) மாலை ஆ) மலை இ) பசு ஈ) வனம்

15. 'முத்துடைத்தாமம்' ______ இலக்கணக் குறிப்பு ______ ஆகும்.

அ) இரண்டாம் வேற்றுமைத்தொகை அ) பண்புத்தொகை

இ) அடுக்குத்தொடர் ஈ) பெயரெச்சம்

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.21 கட்டாயம்) 4 x 2 = 8**

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

ஆ) குடும்பவிளக்கு என்ற நூலை எழுதியவர் பாரதிதாசன் ஆவார்.

17. 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?

18. பகுத்தறிவு என்றால் என்ன?

19. சாரதாச்சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

20. தென்திராவிட மொழிகள் நான்கினை எழுதுக.

21. 'தரும்' என முடியும் குறட்பாவினை எழுதுக.

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5 x 2 = 10**

22. சொற்றொடர் உருவாக்குக.

அ) பசுமரத்தாணி போல ஆ) அத்திப்பூத்தாற் போல

23. 'வளர்ப்பாய்' -சொல்லின் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.

அ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ______ (கலந்துகொள்)

ஆ) உலகில் மூவாயிரம் மொழிகள் ______ (பேசு)

25. கலைச்சொல் தருக (தமிழாக்கம்)

அ) Linguistics

ஆ) Literature

26. மரபுப் பிழைகளை நீக்குக.

அ) கயல் பானை செய்யக் கற்றுக்கொண்டாள்

ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது.

27. வகுப்பறை சிரித்தது ______ மஞ்சள் பூசினாள்

எவ்வகை ஆகுபெயரெனக் குறிப்பிடுக.

28. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டு தருக.

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி 2 x 3 = 6**

29. மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

30. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களை குறிப்பிடுக.



CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

31. பத்தியைப் படித்துப் பதில் தருக.

குளித்தல் என்ற சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள். சூரிய வெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருள். குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று. 'குள்ளக் குளிரக் குடைந்து நீராடி' என்கிறார் ஆண்டாள். தெய்வச் சிலைகளைக் குளி(ர்)க்கவைப்பதே திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

அ) குளித்தல் என்ற சொல்லின் பொருள் என்ன?

ஆ) உடல் ஏன் வெப்பமடைகிறது?

இ) குளித்தலைப்பற்றி ஆண்டாள் கூறுவது யாது?

**எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி (வினா எண்.34 கட்டாயம்)** 2 x 3 = 6

32. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கிறது?

33. 'என் சமகாலத்தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

34. காடெல்லாம் கழைக்கரும்பு - எனத்தொடங்கும் பாடல் (அல்லது) 'பூவாது காய்க்கும்' - எனத்தொடங்கும் சிறுபஞ்சமூலப்பாடலினை எழுதுக.

**எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** 2 x 3 = 6

35. சொல்வின் வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

36. வல்லினம் மிகா இடங்களுக்கு மூன்று எடுத்துக்காட்டு தருக.

37. அலகிட்டு வாய்பாடு எழுதுக.

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம் நாணத் தக்க துடைத்து

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5 x 5 = 25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**


ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விளக்குக.

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் பிரதிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எஸ்.ராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' எனும் நூல் குறித்த கருத்துக்களை கடிதமாக எழுதுக.

40. காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.





CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

41. மொழிபெயர்க்க

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

42. அ) நீங்கள் கற்றறிந்த சாதனைப் பெண்கள் குறித்து விரிவாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விவரிக்க.

**3 x 8 = 24**

V. **விரிவான விடையளி**

43. அ) "தண்ணீர்" விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) தாய்மைக்கு வறட்சி இல்லை கதையினை சுருக்கி எழுதுக.

44. அ) பெண்கல்வி குறித்து விளக்குக.

**(அல்லது)**

ஆ) வீட்டிற்கோர் புத்தகச்சாலை, தலைப்பில் கட்டுரை வரைக.

45. அ) தமிழகத்தின் நீர்நிலைப் பெயர்களும், அவற்றின் விளக்கங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழ்நாட்டுச் சிற்பங்களின் கலைநயத்தினை விளக்குக.



CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS